முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 581**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**02.05.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கா
தவசியாக வாழும் ஞான தேசிகா
கர்மவினை போக்கி உலகமக்களை
காத்தருள வந்த என் சக்தியான குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே ஞான அறிவுரை ஆசி
ஆக்கமுற அரங்கன் உன் வழிநித்தம்நித்தம் அருள்பலம் கூட்டி ஆறுமுகன் யானிருக்க
அனைத்து வகையும் அரங்கன் சக்தி உலகறியப்படும்
3. அறியப்பட நடப்புகால பேரிடர்கள்
அனைத்து சிக்கல்களும் அகிலத்தை விட்டுவிலகி ஓடும்
மறுப்பின்றி உன்னை ஏற்ற மக்கள் கூட்டமே
மரணமில்லா பெருவாழ்வு கண்டு சிறக்கும்
4. சிறப்பான ஞானத்தை உன்வழி
சித்தியாக வரமாக மக்களுக்கு யானே அருள
அறமென உன்வழி கூடிய மக்களும்
அன்னதான சேவையோடு உன் தர்ம கொள்கை வழி
5. வழி தன்னில் வழிவழியாக தொடரும் மக்களும்
வல்லமைகூடி வள்ளல் தன்மைகள் நிரம்பி
அழியாமை பெற்று சிறப்பது உறுதிஉறுதி
ஆறுமுகன் யான் அற்புதங்கள் உன்வழி நிகழ்த்திவர
6. வருகின்ற உன் தர்மத்தாலே உலகம் காக்கப்படும்
வள்ளல் நெறியான உன் சன்மார்க்கம் மூலமே உலகம் ஞான ஆட்சி பெறக்கூடும்
பெருமைபட அரங்கனோடு இணைந்துள்ள ஞான கூட்டமே
பேருலகத்தையே மாற்றி ஞான ஆட்சிதரக்கூடும்
7. கூடவே அரங்கனே உந்தன் மகா சூட்சுமத்தை
குவலயத்தில் மக்கள் கண்டறிய காலம் மேவி வருகுதப்பா
ஈடேற்றம் யானே இறங்கி அற்புதமாய் செய்து வருவதாலே
இனியும் கலியின் சிக்கல்கள் தொடரா வண்ணம் மாற்றம்
8. மாற்றம் சடுதி கண்டு இந்த உலகோர்க்கு
மறுமை வெல்லும் பக்குவமும் பாதுகாப்பும்
ஆற்றல்பட ஞானவாழ்வும் அதிசயமும்
அரங்கா உன் வழிவழி சடுதி நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.